# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



காஞ்சிபுரம் பெருநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை :- திரு.அ. சர்தார், எம்.ஏ.,

ந.க.எண்.10215 /2015/எப்.2, நாள்.18.01.2018.

பொருள் : மனைப்பிரிவு – காஞ்சிபுரம் பெருநகராட்சி – வார்டு – 3, பிளாக் 29, நகரளவை எண்.2151/2, 2154, 2155, 2156 மற்றும் பிளாக் எண்.46 (பழைய பிளாக் எண்.30) நகரளவை எண்.2230/1, 2231/2, 2231/3, 2235/1, 2235/2, 2236, 2237 மற்றும் 2238–ல் 4.376 ஏக்கர் இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப் பிரிவுக்கு உத்தரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. தங்களின் மனைப்பிரிவு ஒப்புதல் கோரிய விண்ணப்பம் நாள்.25.09.2015.
2. உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர் (பொ), காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் ந.க.எண்.27/2016/காஉதிகு, நாள்.19.05.2017.
3. காஞ்சிபுரம் நகர் மன்ற தீர்மானம் எண்.247/2017, நாள்.28.09.2017.
4. தங்களின் தானப்பத்திரம் எண்.4135/2017, நாள்.23.10.2017.
5. உறுப்பினர் செயலர் (பொ), காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் தொழில்நுட்ப ஒப்புதல் ந.க.எண்.27/2016/கா.உ.தி.கு. நாள்.06.11.2017.

--------

**உத்தரவு :-**

காஞ்சிபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு – 3, பிளாக் 29, நகரளவை எண்.2151/2, 2154, 2155, 2156 மற்றும் பிளாக் எண்.46 (பழைய பிளாக் எண்.30) நகரளவை எண்.2230/1, 2231/2, 2231/3, 2235/1, 2235/2, 2236, 2237 மற்றும் 2238–ல் 4.376 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தினை மனைப்பிரிவாக்கிட பார்வை 1–ல் கண்டுள்ள தங்களின் விண்ணப்பம் மற்றும் வரைபடங்களை தொழில்நுட்ப அனுமதி வழங்க ஏதுவாக உரிய நேராய்வு குறிப்புகளுடன் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.10215/2015/எப்2, நாள்.06.01.2016–ல் அனுப்பி வைக்கப்பட்டது.

உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர் (பொ), உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம் அவர்களின் பார்வை 2–ல் கண்ட கடிதத்தில் மேற்படி மனைப்பிரிவு தொடர்பாக உத்தேச சாலைகள், பூங்காக்கள் மற்றும் திறவிடத்திற்கான ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்து, தானப்பத்திரம் பதிவு செய்யப்பட்டதை உறுதி செய்து அத்தாட்சியிட்ட தானப்பத்திர நகல், நகர மன்ற தீர்மானம், வில்லங்கச் சான்று மற்றும் தார் சாலை அமைக்கப்பட்ட புகைப்படம் ஆகியவற்றினை அனுப்பி வைக்குமாறு பூங்கா மற்றும் சாலை அமைப்பு வரைபடத்துடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா 1, 2 மற்றும் திறவிடத்தினை தானமாக எடுத்துக்கொள்ள பார்வை 3–ல் கண்டுள்ள இந்நகர மன்ற தீர்மானம் எண்.247/2017, நாள்.28.09.2017–ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி இடம் பார்வை 4–ல் கண்டுள்ள தான பத்திரம் எண்.4135/2017, நாள்.23.10.2017–ல் நகராட்சியால் மனுதாரரிடமிருந்து தானமாக பெறப்பட்டது. மேற்படி நகர் மன்ற தீர்மானம் நகல் மற்றும் புகைப்படம், வில்லங்கச் சான்று ஆகியவை சேர்த்து மேல் நடவடிக்கைக்காக உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.10215/2017/எப்.2, நாள்.25.10.2017–ல் அனுப்பி வைக்கப்பட்டது.

இதன்பின் உறுப்பினர் செயலர் (பொ), உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம் அவர்களின் பார்வை 5–ல் கண்டுள்ள 06.11.2017–ம் தேதிய ந.க.எண்.27/2016/காஉதிகு உத்தரவில், மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள 4.376 ஏக்கர் பரப்பளவு இடத்தை வீட்டு மனைகளாக பிரிக்க திட்ட அனுமதி எண்.4/2017 என எண்ணிடப்பட்டும், வரைபடத்திற்கு ம.வ./க.உ.தி.கு.எண்.10/2017 என எண்ணிடப்பட்டும் இறுதி தொழில்நுட்ப ஒப்புதல் நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டு வரைபடத்துடன் நகராட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து கீழ்கண்ட நிபந்தனைகளுடன் மனைப்பிரிவு வரைபடத்துடன் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

## I - சிறப்பு நிபந்தனைகள்

1. கைலாசநாதர் கோயில் சுற்று சுவர் எல்லையிலிருந்து 100 மீட்டர் வரை கட்டிடம் கட்ட தடை செய்யப்பட்டுள்ளது.
2. இந்திய தொல் பொருள் ஆய்வுத் துறை அவர்களின் அனுமதியுடன் பாதுகாக்கப்பட்ட நினைவு சின்னங்கள் சுற்றி தடை செய்யப்பட்டுள்ள முறைப்படுத்தப்பட்டுள்ள கைலாசநாதர் கோயில் எல்லையிலிருந்து 100 மீட்டர் முதல் 300 மீட்டர் வரை கட்டிடம் கட்ட தடையில்லா சான்று பெற்று கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
3. ஞாபகச் சின்னம் பாதுகாக்கும் பகுதியில் 100 மீட்டர் முதல் 1000 மீட்டர் வரை கட்டிடத்தின் உயரம் 9 மீ. தரைதளம் மற்றும் இரண்டு தளங்கள் மட்டும் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட வேண்டும்.
4. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12201/17/சிபி, நாள்.28.09.2017–ன் படி " The Tamil Nadu Government is G.O.Ms.No.112, Housing and Urban Development Department, dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to Advertise, Market, Book, Sell (or) Offer for Sale or Invite persons to purchase in any manner any plot, Apartment (or) Building as the case may be, in any Real Estate Project (or) Part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"

## II - நிபந்தனைகள்

5. மனைப்பிரிவு பகுதியில் மனைப்பிரிவு நிபந்தனை 20–ன் படி மனைப்பிரிவிற்கு நகராட்சியால் வழங்கப்பட்ட ஒப்புதல் நகல் கடித எண்ணையும் ஒப்புவிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தையும் குறிப்பிட்டும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண் மற்றும் நாள் அடங்கிய தகவல் பலகை ஒன்றை மனுதாரர் தனது சொந்த செலவில் நடப்பட வேண்டும்.
6. பதிவு செய்து கொண்டும், பத்திரத்தை மனைப்பிரிவின் நிபந்தனைகளின்படி முக்கிய சாராம்சமான முன்பக்கம், பின் பக்கம் மற்றும் பக்க வாட்டு காலிமனை விடப்பட வேண்டிய அவசியத்தை குறிப்பிடப்பட வேண்டும். சாலைகள், பொது உபயோக இடங்கள் நகராட்சியின் பராமரிப்புக்கு தானம் செய்யப்பட்ட விவரத்தினை குறிப்பிடப்பட வேண்டும்.
7. மனைப்பிரிவு நிபந்தனைகள் அனைத்தையும் காட்டும் மனைப்பிரிவு நிபந்தனைகள் படிவத்தை அது சம்பந்தமான கிரைய பத்திரத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

8. ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் அந்தந்த ஆண்டில் கிரையம் செய்யப்பட்ட மனைகள் பத்திரப்பதிவு செய்த விவர நகலுடன் மனைக்கான காலிமனை வரி விதிப்புக்கு மனு செய்து கொள்ள வேண்டும். பத்திரத்தின் அடிப்படையில் காலி மனைவரி பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும். அதுவரை மனுதாரர் பெயரிலேயே காலிமனை வரி விதிப்பு அமையும்.

9. எதிர் காலத்தில் புதை வடிகால் திட்டம் செயல்படுத்தும் போது அதற்கான மொத்த மதிப்பீடு தொகையினையும், சாலை துண்டிப்பு கட்டணம், இணைப்பு கட்டணம் மற்றும் சாலை சீரமைப்பு கட்டணம் ஆகியவைகளை மனைப்பிரிவுதாரரோ அல்லது தனிப்பட்ட மனையின் குடியிருப்போர்கள் தனது சொந்த செலவில் நகராட்சியில் பணம் செலுத்தி புதை வடிகால் வசதி ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

10. மனைப்பிரிவு குடியிருப்போர் தமக்கு தேவையான குடிநீர் இணைப்புக்கு தேவையான பகிர்மான குழாயினை பிரதான குழாயில் இருந்து எடுத்து வரவும், அதற்கு தேவையான சாலை துண்டிப்பு மற்றும் சாலை மறு சீரமைப்பு தொகையினை நகராட்சிக்கு தனது சொந்த செலவில் பணமாக செலுத்தி இணைப்பு பெற்றுக்கொள்ள வேண்டும்.

11. எதிர் காலத்தில் மனுதாரர் அல்லது குடியிருப்புதாரர்கள் தனது சொந்த செலவில் மனைப்பிரிவு பகுதியில் துப்புரவு வசதிக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை செய்துக்கொள்ள வேண்டும்.

12. குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மீறப்படுமாயின் இந்த உத்தரவு உரிய சட்ட விதிகளின்படி ரத்து செய்யப்பட்டு சட்ட விதிகளின்படி மேல் நடவடிக்கை தொடரப்படும்.

ஆணையர்
காஞ்சிபுரம் பெருநகராட்சி

12/11/18

**இணைப்பு** – மனைப்பிரிவு வரைபடம் ஒன்று
மற்றும் நிபந்தனைகளின் பிரதி ஒன்று

பெறுநர்

**திரு.E. கீர்த்திநாதன் மற்றும்**
**திருமதி.K. சரஸ்வதி,**
எண்.5, காந்தி ரோடு,
காஞ்சிபுரம்.

**நகல்** :-

1. உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம்.
2. மாவட்ட பதிவாளர், காஞ்சிபுரம்.
3. இணை சார் பதிவாளர், காஞ்சிபுரம்.
4. நகராட்சி பொறியாளர், காஞ்சிபுரம் பெருநகராட்சி.
5. வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் பெருநகராட்சி.
6. நகரமைப்பு அலுவலர், காஞ்சிபுரம் பெருநகராட்சி.
7. நகரமைப்பு ஆய்வாளர் – 2, காஞ்சிபுரம் பெருநகராட்சி.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

## empowering your real estate decisions with smart tools

### Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

### Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

### Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

### Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

### Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate